**செய்தி வெளியீடு எண்: 75/2022** **நாள்: 12.08.2022**

**பத்திரிக்கைச் செய்தி**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சார்பாக**
**75-வது சுதந்திர தின கிராமியக் கலை நிகழ்ச்சிகளை**
**இயக்குநர் ராஜேஷ் சதிர்வேதி முரசு கொட்டி தொடங்கி வைத்தார்**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சார்பாக புரட்சித்தலைவர் டாக்டர். எம்.ஜி.ராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் இந்திய சுதந்திரத்தின் 75-வது ஆண்டை முன்னிட்டு (Azadi ka Amrit Mahostav and Har Ghar Tiranga) சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், தமிழ்நாடு கிராமியக் கலைகள் வளர்ச்சி மையத்துடன் இணைந்து நடத்திய பல்வேறு கிராமியக் கலை நிகழ்ச்சிகளை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் (இயக்கம் மற்றும் அமைப்பு) ராஜேஷ் சதிர்வேதி முரசு கொட்டி தொடங்கி வைத்தார்.

கலை நிகழ்ச்சிகளை தொடங்கி வைத்த இயக்குநர் ராஜேஷ் சதுர்வேதி தெரிவித்ததாவது:-

மதுரை கலைமாமணி தி.சோமசுந்தரம் குழுவை சார்ந்த 20 பேர் கொண்ட நாட்டுப்புற கலைஞர்கள் பல்வேறு கிராமியக் கலை நிகழ்ச்சிகளை நடத்தினார்கள். இதில் கரகாட்டம், காவடியாட்டம், மயிலாட்டம், காளையாட்டம், சிலம்பாட்டம், ஒயிலாட்டம், கோலாட்டம், தப்பாட்டம், மற்றும் நையாண்டி மேளம் போன்ற கிராமியக் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து நாளை 13.08.2022 (சனிக்கிழமை) விம்கோ நகர் மெட்ரோ இரயில் நிலையத்திலும், 14.08.2022 (ஞாயிற்றுக்கிழமை) அன்று கிண்டி கத்திப்பாரா நகர்ப்புற சதுக்கத்தில் நிறைவாக 15.08.2022 (திங்கள்கிழமை) சுதந்திர தினத்தன்று அசோக் நகர் மெட்ரோ இரயில் நிலையத்திலும் மாலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெறுகிறது.

75-வது சுதந்திர தினத்தை ஒட்டி நடைபெறும் இந்த கிராமியக் கலை நிகழ்ச்சிகளை பொதுமக்கள், மெட்ரோ இரயில் பயணியர் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் கண்டு மகிழ சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளதை மாலை 6 மணி முதல் 8 மணி வரை கண்டுகளிக்கலாம். அனைவருக்கும் அனுமதி இலவசம்.

இந்நிகழ்ச்சியில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் கூடுதல் பொது மேலாளர் எஸ். சதீஷ்பிரபு (தொடர்வண்டி மற்றும் இயக்கம்), இணை இயக்குநர் எல்.கிரிராஜன் (மக்கள் தொடர்பு), துணை மேளாலர் ஸ்ருதி சாம்பவி (மக்கள் தொடர்பு), உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**